தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை–600 035. தொலைபேசி எண்.044–2951 5590

## ஆணை நாள். 06.10.2026

## முன்னிலை

திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., பி.எல்., எம்.பில்.,

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண் : CP -4479/A/2024**

திரு. K.வடிவேலு .. மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 101.. .. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மேற்குறிப்பிட்ட வழக்கு 06.10.2026 அன்று ஆணையத்தில் வைத்து விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் மனுதாரர் திரு. K.வடிவேலு அவர்கள் நேரில் ஆஜராகவில்லை. தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல்முறையீட்டு விதிகள், 2012) விதி 7(2)–ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாகும். பொது அதிகார அமைப்பின் சார்பாக திரு.வே. மகேந்திரன், பொதுத் தகவல் அலுவலர் /தலைமையிடத்து துணை வட்டாட்சியர், எடப்பாடி வட்டம், சேலம் மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார்.

2. மனுதாரர் 08.03.2024 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், மனுதாரர் கடந்த 07.02.2024 தேதியில் எடப்பாடி வட்டாட்சியர் அவர்களுக்கு அளித்த புகார் மனுவில் விவசாய நிலத்தில் அரசிடம் உரிய அனுமதி பெறாமல் PHOENIX & CO என்ற பெயரில் கட்டுமான நிறுவன தொழிற்சாலை கட்டியுள்ளதாகவும் அதன் பேரில் உரிய சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியும், தெரிவித்துள்ளார். மேற்படி நீதிமன்ற வழக்கிற்க்கு தேவைபடுவதால் 07.02.20024 தேதியிட்ட எனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ள (PHOENIX & CO) கட்டுமான நிறுவனத்தை கள ஆய்வு செய்த

தகவலினையும் அறிக்கையின் நகலையும் வழங்கக் கோரி 5 இனங்களில் விண்ணப்பித்துள்ளார்

3. பொது தகவல் அலுவலர் 20.09.2024 நாளிட்ட கடிதத்தின்படி பதில் வழங்கியுள்ளார், பொது தகவல் அலுவலரின் பதில் திருப்தி அளிக்காத காரணத்தினால் மனுதாரர் 25.09.2024 நாளிட்ட பிரிவு 18(1)-ன் கீழ் புகார் மனுவை தாக்கல் செய்துள்ளார். அந்த புகார் மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு 06.10.2026 முற்பகல் இவ்வாணையத்தில் வைத்து நேரடி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மனுதாரர் கோரிய தகவல்களை ஏற்கனவே 11.06.2024 மற்றும் 20.09.2024 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார். மேலும், மனுதாரர் கோரிய தகவல்களை மீண்டும் 29.09.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக பதிவஞ்சல் மூலம் வழங்கியுள்ளதாக ஆணையத்தில் தெரிவித்து, அக்கடிதத்தின் நகலினை ஆணையத்தில் சமர்ப்பித்தார்.

5. இன்றைய விசாரணை மற்றும் ஆவணப் பரிசீலனையின் முடிவில், மனுதாரரின் தகவல் கோரும் மனுவையும், பொதுத் தகவல் அலுவலரின் தகவலையும் இணைத்துப் பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு அனைத்து இனங்களுக்கான முழுமையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதை ஆணையம் உறுதி செய்து, இப்புகார் மனு முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண் CP-4479-A-2024</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
எடப்பாடி வட்டம்,
சேலம் மாவட்டம் – 637 101.

**<u>மனுதாரர்:</u>**
திரு. K.வடிவேலு
8/231/1, பொந்தனூர் காட்டுவளவு,
கன்னந்தேரி அஞ்சல்,
சங்ககிரி தாலுகா,
சேலம் – 637102

Copy to File
Je/PA 06.10.2026